***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 256/2025 – P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | செல்வராஜ் |
| *Father/Husband's Name* | சின்னப்பிள்ளை |
| *Village* | மேலச்சேரி |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *63* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.07.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சக்திவேல் எனது மகன் ஆவார். பாலு உடன்பிறந்த சகோதரர் ஆவார். வளர்மதி என்பவரை தெரியும். மேற்படி நபர்கள் அனைவரும் எனது ஊரைச்சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 2025-ம் வருடம் மார்ச் மாதம் தேதி சரியாக ஞாபகமில்லை. ஒரு நாள் இரவு சுமார் 07.00 மணியளவில் எங்கள் பக்கத்து ஊர்க்காரர்களை சேர்ந்த 4 நபர்கள் எங்கள் ஊரிலுள்ள கிராம பஞ்சாயத்திற்கு கூட்டம் கூடுவதற்கு மனு போட்டதன் பேரில் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்களும், பக்கத்து ஊரைச்சேர்ந்தவர்களும் பிரச்சனையை பற்றி திருநாவுக்கரசு என்பவரின் வீட்டு வாசலில் கூட்டம் நடந்துக்கொண்டிருந்தது. அப்போது மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருட்டாக இருந்த நிலையில் தீடிரென்று கூட்டத்தின் மீது யாரோ கல் எறிந்தார்கள். அந்த கூட்டத்திற்குள் பலர் நபர்கள் அவசரமாக கலைந்தபோது ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டார்கள். அதில் எனக்கு கையில் காயம் ஏற்பட்டது. அதேபோல் எனது மகன் சக்திவேல், என் அண்ணன் பாலு, ஆஜர் எதிரியின் அம்மா வளர்மதி ஆகியோர்களுக்கும் உள்காயம் ஏற்பட்டது. நான் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். நான் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது, போலிசார் என்னை விசாரித்தபோது, கூட்டத்திற்குள் கல்

எறிந்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு வாய்மொழியாக சொன்னேன். பிறகு என்னிடம் ஒரு பேப்பரில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன சங்கதிகள் எழுதியுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. (**புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தபோது மேற்கூறிய சங்கதிகளை தான் சொன்னேன்.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எதிரியுடன் சமரசம் செய்துக்கொண்டு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் நானும் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் - சரிதான். எதிரி என் ஊர்க்காரர் மற்றும் பழக்கமானவர் என்ற முறையில் சமரசம் செய்துக் கொண்டுள்ளேன் என்றால் - சரிதான். (**சமரச மனுவில் உள்ள எனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. போலிசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் திருநாவுக்கரசு மகன் ஆஜர் எதிரிக்கும் சொத்து சம்மந்தமாக தகராறு ஏற்படும் என்றும், நான் கிராம கமிட்டி தலைவர் என்ற முறையில் பலமுறை சமரசம் செய்து வைத்தேன் என்றும், கடந்த 28.03.2025ம் தேதியன்று காலை 07.00 மணியளவில் ஆஜர் எதிரி அவரது அப்பா திருநாவுக்கரசுடன் இடம் சம்மந்தமாக தகராறு செய்துக்கொண்டிருந்தார் என்றும், அந்த வழியாக வந்த நான் ஆஜர் எதிரியிடம் கேட்டபோது, ஆஜர் எதிரி என்னை கொச்சை வார்த்தைகளால் திட்டியும், கீழே கிடந்த கல்லை எடுத்து எனது தலையில் அடித்தார் என்றும், அதில் எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டதென்றும், அதை தடுக்க வந்த எனது மகன் சக்திவேல், எனது அண்ணன் பாலு ஆகியோர்களை எதிரி கையால் அடித்தார் என்றும், ஆஜர் எதிரியின் அம்மாவை ஆஜர் எதிரி கல்லால் தாக்கினார் என்றும், அதில் ஆஜர் எதிரியின் அம்மாவிற்கு வலது கையில் காயம் ஏற்பட்டதென்றும், அருகிலிருந்தவர்கள் தடுத்தபோது ஆஜர் எதிரி எனக்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், நான் மன்னார்குடி அரசு மருத்துவமனையில்

சிகிச்சைக்கு சென்றேன் என்றும், உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தபோது போலிசார் என்னை விசாரித்து புகார்வாக்குமூலம் பதிவுசெய்து, என்னிடம் காண்பித்தபிறகு தான் நான் கையொப்பம் செய்தேன் என்றும், உண்மைச்சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் எதிரியுடன் நீதிமன்றத்திற்கு வெளியே சமசரம் ஆகிவிட்டபடியாலும், ஆஜர் எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்புக்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன்,10.07.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.(மு.கூ.பொ.)

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT***
***Mannargudi***
***CC.No. 256/2025 – P.W. 2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | ராஜ்குமார் |
| *Father/Husband's Name* | பாலு |
| *Village* | மேலச்சேரி |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *42* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.07.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வராஜ், சக்திவேல் அ.சா.1னின் மகன் ஆவார். பாலு அ.சா.1னின் சகோதரர் ஆவார். வளர்மதி என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். வழக்கு சம்பவம் பற்றி எனக்கு நேரிடையாக எதுவும் தெரியாது. நான் கேள்விபடவும் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலனைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் திருநாவுக்கரசு மகன் ஆஜர் எதிரிக்கும் சொத்து சம்மந்தமாக தகராறு ஏற்படும் என்றும், அ.சா.1 செல்வராஜ் என்பவர் கிராம கமிட்டி தலைவர் என்ற முறையில் பலமுறை சமரசம் செய்து வைத்தார் என்றும், கடந்த 28.03.2025 ம் தேதியன்று காலை 07.00 மணியளவில் ஆஜர் எதிரி அவரது அப்பா திருநாவுக்கரசுடன் இடம் சம்மந்தமாக தகராறு

செய்துக்கொண்டிருந்தார் என்றும், அந்த வழியாக வந்த அ.சா.1 செல்வராஜ் ஆஜர் எதிரியிடம் கேட்டபோது, ஆஜர் எதிரி அ.சா.1 செல்வராஜை கொச்சை வார்த்தைகளால் திட்டியும், கீழே கிடந்த கல்லை எடுத்து தலையில் அடித்தார் என்றும், அதில் அவருக்கு ரத்தக்காயம் ஏற்பட்டதென்றும், அதை தடுக்க வந்த அ.சா.1னின் மகன் சக்திவேல், அவரது அண்ணன் பாலு ஆகியோர்களை எதிரி கையால் அடித்தார் என்றும், ஆஜர் எதிரியின் அம்மாவை ஆஜர் எதிரி கல்லால் தாக்கினார் என்றும், அதில் ஆஜர் எதிரியின் அம்மாவிற்கு வலது கையில் காயம் ஏற்பட்டதென்றும், அருகிலிருந்தவர்கள் தடுத்தபோது ஆஜர் எதிரி அ.சா.1க்கு கொலைமிரட்டல் விடுத்தார் என்றும், உண்மைச் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறிவிட்டு தற்சமயம் எதிரியுடன் அ.சா.1 நீதிமன்றத்திற்கு வெளியே சமசரம் ஆகிவிட்டபடியாலும், அவர்களுக்கு ஆதரவாகவும், அரசு தரப்புக்கு எதிராகவும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன்,10.07.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
மன்னார்குடி.(மு.கூ.பொ.)

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 256/2025 – P.W. 3 (LW5)***

| | |
|---|---|
| *Name* | ஐயப்பன் |
| *Father/Husband's Name* | செல்வராஜ் |
| *Village* | மேலச்சேரி |
| *Taluk* | *மன்னார்குடி* |
| *Religion* | |
| *Age* | *40* |

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 10.07.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 செல்வராஜ், சாட்சி பாலு மற்றும் ஆஜர் எதிரியை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வைமகசரிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பத்தை சென்ற வருடம் தேதி, மாதம் ஞாபகமில்லை. நானும், பாலு என்பவரும் ஒரு வேலையாக கோட்டூர் காவல் நிலையம் சென்றிருந்தபோது போலிசார் எங்களிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். அதில் என்ன எழுதியுள்ள என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. **பார்வமைகசர் மகசரிலுள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத்தரப்பில் தன்னுடைய சாட்சி முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை, இந்திய சாட்சிய சட்டப்பிரிவு 154 மற்றும் குற்றவியல் நடைமுறை சட்டப்பிரிவு 162ன் கீழ் விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. பரிசீலணைக்கு பின் விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது).**

**<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் கடந்த 28.03.2025-ம் தேதியன்று காலை 07.00 மணியளவில் ஆஜர் எதிரியின் வீட்டின் முன்பாக ஆஜர் எதிரிக்கும், அ.சா.1 க்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக போலிசார் 19.00 மணியளவில் மேற்படி சம்பவயிடத்தை பார்வையிட்டு, சாட்சிகள் என் முன்னிலையிலும், பாலு முன்னிலையிலும், பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்றும், உண்மைச்சம்பவத்தை கூறிவிட்டு தற்சமயம் கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு, எனக்கே தெரிந்த காரணத்தினால் உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

(ஒம்/-) ஜெ.தமிழ்முருகன்,10.07.2026
நீதித்துறை நடுவர் எண்.2,
*மன்னார்குடி.(மு.கூ.பொ.)*